

හෙක්ටර් කොබ්බෑකඩුව
ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்

# HECTOR KOBBEKADUWA
# AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE



සංවත්සරය
**23** ஆண்டு நிறைவு விழா
**Anniversary**

ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණුකිරීමේ ආයතනය.
හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය
යනුවෙන් නාමගත කිරීම නිමිත්තෙන් නිකුත් කරන ලදී.

க.ஆ.ப.நிறுவகத்தை ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமாக
பெயரிடும் வைபவத்தில் வெளியிடப்பட்டது

**ISSUED ON THE OCCASION OF THE NAMING CEREMONY OF THE AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE AS HECTOR KOBBEKADUWA AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE**

# ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණුකිරීමේ ආයතනය

# හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණුකිරීමේ ආයතනය

**යනුවෙන් නාමගතකිරීම හා**

**ආයතනයේ 23 වන සංවත්සරය - වැඩසටහන 1995 .02. 22**

| | | |
|---|---|---|
| පෙ. ව. 9.30 | - | ආරාධිත අමුත්තන් අසුන් ගැනීම |
| පෙ. ව. 9.45 | - | සමාරම්භය |
| පෙ. ව. 9.55 | - | ආයතනයේ නාමපුවරුව නිරාවරණය කිරීම.<br>කෘෂිකර්ම, ඉඩම් හා වන සම්පත් අමාත්‍ය,<br>ගරු දි.මු. ජයරත්න මහතා. |
| පෙ. ව. 10.05 | - | කොබ්බෑකඩුව ඇමතිතුමා සිහිකිරීමට විනාඩි දෙකක නිශ්ශබ්දතාවය |
| පෙ. ව. 10.07 | - | පිළිගැනීමේ කථාව - ආයතනයේ අධ්‍යක්ෂ<br>ආචාර්ය ඇස්. ජී. සමරසිංහ |
| පෙ. ව. 10.15 | - | කෘෂිකර්ම, ඉඩම් හා වන සම්පත් අමාත්‍යාංශයේ ලේකම් ඩී. එම්. ආරියරත්න මහතාගේ කථාව |
| පෙ. ව. 10.30 | - | කෘෂිකර්ම නියෝජ්‍ය අමාත්‍ය, ගරු සමරවීර වීරවන්නි මහතාගේ කථාව |
| පෙ. ව. 10.45 | - | ඉඩම් හා වන සම්පත් නියෝජ්‍ය අමාත්‍ය ගරු නන්දිමිත්‍ර ඒකනායක මහතාගේ කථාව |
| පෙ. ව. 11.00 | - | දෙමළ කථාව |
| පෙ. ව. 11.15 | - | ආහාර සහ කෘෂිකර්ම සංවිධානයේ ශ්‍රී ලංකා නියෝජිත ටී. කිමෝටෝ මහතාගේ කථාව |
| පෙ. ව. 11.30 | - | කෘෂිකර්ම, ඉඩම් හා වන සම්පත් අමාත්‍ය,<br>ගරු. දි.මු ජයරත්න මහතාගේ කථාව |
| ප. ව. 12.15 | - | ආයතනයේ විසි වසරක් සේවය කළ නිළධාරීන්ට උපහාරය |
| ප. ව. 12.30 | - | ජාතික ගීය |

## ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණුකිරීමේ ආයතනය

# හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණුකිරීමේ ආයතනය

### යනුවෙන් නාමගත කිරීම

1970 සිට 1977 දක්වා පැවති වාමාංශික එක්සත් පෙරමුණු ආණ්ඩුවේ කෘෂිකර්ම හා ඉඩම් අමාත්‍ය වූ ගරු එච්.එස්.ආර්.බී. කොබ්බෑකඩුව මහතා මෙරට ප්‍රගතිශීලී ජනතාව සහ විශේෂයෙන් උඩරට ගොවි ජනතාව විසින් තමන්ගේ නායකයා ලෙසත්, ශ්‍රී ලංකාවේ ඓතිහාසික ඉඩම් ප්‍රතිසංස්කරණ ව්‍යාපාරය හඳුන්වා දී ක්‍රියාත්මක කළ වීරවරයා ලෙස පමණක් නොව උඩරට ගැමි ගොවි ජනතාවගේ ජීවන මට්ටම් නගාලීම සඳහා ඇපකැපවුණු වීර පුරුෂයකු ලෙසින්ද සලකනු ලැබේ.

දේශීය හා විදේශීය ධනේශ්වර සමාගම් විසින් හිමිකර ගෙන තිබූ පාරම්පරිකව උඩරට ගැමි ජනතාවට හිමිවිය යුතු කන්ද උඩරට ඉඩම් සම්පත උඩරට මහ ජනතාවගේ සුභසිද්ධිය සඳහා යළි පවරාදීමේ ව්‍යාපාරයෙහි කොබ්බෑකඩුව මැතිතුමා එක්සිතින්ම පෙරමුණ ගත්තේය. මෙම ඉඩම්වල ඵලදායීතාවය උපරිම මට්ටමකට නැංවීමෙහිලා හා එමගින් ලැබෙන ආර්ථිකය හා සංවර්ධන ප්‍රතිලාභ එම ජනතාවට සාක්ෂාත් කර දෙනු වස්, එතුමා උඩරට සමුපකාර වතු සංවර්ධන මණ්ඩලය (උසවසම) හා ජනතා වතු සංවර්ධන මණ්ඩලය (ජනවසම) ආරම්භ කළේය.

කොබ්බෑකඩුව ශූරීන් වෘත්තියෙන් ශ්‍රී ලංකා ශ්‍රේෂ්ඨාධිකරණයේ නීතීඥයෙකි. සිය වෘත්තිය ඉටු කිරීමේදී උඩරට ගොවි ජනතාවගේ අයිතිවාසිකම් වෙනුවෙන් විශාල සටනක් මෙහෙය වූ ඔහු උඩරට දිළිඳු ගම්වාසීන්ගේ නඩුවලට ගාස්තුවක් නොමැතිව පෙනී සිටියේය. ජාතික දේශපාලනයට පිවිසීමට පෙර පළාත් පාලන දේශපාලනයේ නියැලුණු ඔහු මහනුවර මහ නගර සභාවේ සාමාජිකයකු ලෙසද සේවය කළේය. අවසන් කාලයේදී එතුමා රාජ්‍ය සේවා කොමිසන් සභාවේ සභාපති වරයා ලෙසද කටයුතු කරමින් සිය පොදු ජන සේවය තවදුරටත් ව්‍යාප්ත කළේය.

කෘෂිකර්ම ක්ෂේත්‍රයේදී ප්‍රතිසංස්කරණ හා ව්‍යුහාත්මක වෙනස්කම් හඳුන්වාදීමේ අවශ්‍යතාවයද රජයේ විවිධ කෘෂිකාර්මික සංවර්ධන වැඩසටහන් ක්‍රියාත්මක කිරීම සඳහා නව අනපනත් හඳුන්වාදීමේ කාලීන අවශ්‍යතාවයද එතුමා අවබෝධ කර ගත්තේය.

සය වසරක් වැනි ඉතා කෙටි කාලයකදී මෙම අවශ්‍යතාවය සපුරාලීම සඳහා එතුමා අනපනත් රාශියක් හඳුන්වා දුන්නේය. එතුමා විසින් මෙම කර්තව්‍යය සඳහා පහත සඳහන් අනපනත් ඉදිරිපත් කරන ලදී.

අ. 1972 අංක 01 දරණ ඉඩම් ප්‍රතිසංස්කරණ පනත
ආ. 1972 අංක 02 දරණ කෘෂිකාර්මික ඵලදාවර්ධන පනත
ඇ. 1972 අංක 05 දරණ ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතන පනත
ඈ. 1972 අංක 11 දරණ රාජ්‍ය කෘෂිකාර්මික සංස්ථාපිත කිරීමේ පනත
එ. 1972 අංක 14 දරණ වී අලෙවි මණ්ඩල පනත
ඒ. 1973 අංක 09 දරණ වී නිෂ්පාදකයින්ගේ ඉතිරි කිරීමේ නීතිය
ඉ. 1973 අංක 15 දරණ ජාතික සාගිනි නිවීමේ මණ්ඩල නීතිය
ඊ. 1973 අංක 30 දරණ ශ්‍රී ලංකා පලතුරු මණ්ඩල පනත
උ. 1973 අංක 42 දරණ කෘෂිකාර්මික ඉඩම් නීතිය
ඌ. 1976 අංක 25 දරණ ජනාවාස නීතිය

ශ්‍රී ලංකාවේ කෘෂිකාර්මික සංවර්ධනය උදෙසා කොබ්බෑකඩුව මැතිතුමාගේ කැපවීමත් ශ්‍රී ලංකාවේ කෘෂිකාර්මික සංවර්ධනය පිළිබඳ එතුමා තුල තිබූ දූරදර්ශී චින්තනයත් මෙම තීති කෙටුම්පත් වලින් ඉතා සාරගර්භ ලෙස විදහා දැක්වෙන බව පැවසිය යුතුය.

ශ්‍රී ලංකාවේ ගොවි කටයුතු පර්යේෂණයෙහි අවශ්‍යතාවය හා වැදගත්කම කොබ්බෑකඩුව මැතිතුමා මැනවින් හඳුනා ගත්තේය. ශ්‍රී ලංකාවේ ගොවි ජන තත්වය පිළිබඳව පර්යේෂණ කාර්යයන් ඉටු කරනු සඳහා ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය බිහිකිරීමේ කර්තව්‍යයේදී එතුමා පෙරමුණ ගත්තේය. ලෝක ආහාර හා කෘෂිකර්ම සංවිධානයේ ආධාරය ඇතිව ගොවිකටයුතු පර්යේෂණ පිළිබඳව දකුණු ආසියාතු කලාපීය මධ්‍යස්ථානය ලෙස කටයුතු ඉටු කරනු වස්, එතුමා ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය බිහි කළේය. කොළඹ 07, විජේරාම මාවතේ අංක 114 ස්ථානයේ, ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය ස්ථාපිත කිරීමටත් අවශ්‍ය පහසුකම් සැලසීමටත් එතුමා පෞද්ගලිකවම මහත් උනන්දුවක් ගත්තේය. ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය බිහි කිරීමට හැකි වූයේ කොබ්බෑකඩුව මැතිතුමා ධෛර්යයෙන් කළ වැඩ කටයුතු නිසා බවට සැකයක් ඇත්තේ නොවේ.

ශ්‍රී ලංකාවේ ගොවිකටයුතු ක්ෂේත්‍රයේ ප්‍රධානතම පර්යේෂණ ආයතනය වශයෙන් මෙම ආයතනය කලාපීය හා අන්තර් ජාතික පර්යේෂණ සංවිධානයෙහි ගෞරවයට පාත්‍ර වී ඇත.

ශ්‍රී ලංකාවේ ගොවිජන සංවර්ධනය උදෙසා කොබ්බෑකඩුව මැතිඳුන් විසින් ජාතික වශයෙන් සුවිශේෂ වූ ප්‍රශස්ත කාර්ය භාරයක් ඉටු කරන ලද්දේ වී නමුදු, පොදු වශයෙන් කෘෂිකර්මය උදෙසා එතුමාගේ සේවයත්, විශේෂයෙන් උඩරට ගැමි ගොවි ජනතාව උදෙසා එතුමා විසින් කරන ලද සේවයත්, ජනතාවගේ ගෞරවයට යුතු පරිදි භාජනය නොවී යයි මම පුද්ගලිකව හඟිමි.

හෙක්ටර් කොබ්බෑකඩුව මැතිතුමා විසින් සිදු කරන ලද ජාතික සහ කෘෂිකාර්මික ක්ෂේත්‍රය අරභයා එතුමාගේ දායකත්වයට ගෞරවය පුද කරනු පිණිස ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය ලෙස, නාමගත කිරීමට ශ්‍රී ලංකා රජය තීරණය කර ඇත.

හෙක්ටර් කොබ්බෑකඩුව මහතා විසින් 1972 පෙබරවාරි 22 දින උත්සවාකාරයෙන් විවෘත කරන ලද ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයේ 23 වෙනි සංවත්සරයට සමගාමීව මෙම නාමගත කිරීමේ උත්සවය පවත්වනු ලැබේ.

ශ්‍රී ලංකාවේ කෘෂිකර්මාන්තය වෙනුවෙන් හෙක්ටර් කොබ්බෑකඩුව මැතිඳුන් කරන ලද සේවාවට ගෞරවයක් වශයෙන් කොළඹ 7, විජේරාම මාවතේ අංක 114 දරණ ස්ථානයේ පිහිටි ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතන භූමියේ එතුමාගේ පිළිරුවක් ගොඩනැංවීමටද රජය විසින් තීරණය කර තිබේ.

*- දි.මු. ජයරත්න*
*කෘෂිකර්ම, ඉඩම් හා වන සම්පත් අමාත්‍ය*
*1995 පෙබරවාරි 22.*

# ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය සංස්ථාපිත කරමින් ගරු කොබ්බෑකඩුව මහතා කළ දේශනය

ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය සංස්ථාගත කිරීමේදී
1972 පෙබරවාරි 21 වන දින
ගරු කෘෂිකර්ම හා ඉඩම් ඇමති හෙක්ටර් කොබ්බෑකඩුව මහතා කළ දේශනය

ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය සංස්ථාවක් වීමේ උත්සවයට සහභාගීවීමට පුළුවන්වීම ගැන මම සතුටු වෙමි. වාසනාවකට මෙන් ආයතනයේ ප්‍රථම පුහුණුවීමේ පාඨමාලාව ඇරඹීමත් අදට යෙදී ඇත.

මෙබඳු ආයතනයක් පිහිටුවීම ගැන අදහස ඇති වූයේ වර්ෂ 10 කට ප්‍රථම අග්නිදිග ආසියාතික ප්‍රදේශ සඳහා ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයක් පිහිටුවීමට යෝජනාවක් ඉදිරිපත් වූ පසුවය. මෙවැනි ආයතනයකින් අපේක්ෂා කළ කාර්යයන් මෙසේය.

(අ) අසල්වැසි රටවල් සම්බන්ධ කර ගෙන ගොවිජන ව්‍යුහයට අදාළ ප්‍රශ්න පිළිබඳ පර්යේෂණ පැවැත්වීම.

(ආ) ගොවිජන ප්‍රතිසංස්කරණ සහ අදාළ විෂයන් සම්බන්ධයෙන් පුහුණුවීමේ පහසුකම් සැපයීම.

(ඇ) ගොවිජන ප්‍රශ්න හා ඊට සම්බන්ධ විස්තර එක්රැස් කරන මධ්‍යස්ථානයක් ලෙස ක්‍රියා කිරීම.

මෙම යෝජිත ආයතනය තමන්ගේ රටෙහි පිහිටුවන ලෙස රටවල් කීපයක් විසින්ම ලෝක ආහාර සංවිධානයට ඉල්ලුම් කර තිබුනි. ලංකාණ්ඩුව මගින්ද එවැනි ඉල්ලීමක් කරන ලදී. ලෝක ආහාර සංවිධානය / එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩ පිළිවෙල සහ ලංකාණ්ඩුව අතර පැවති සාකච්චාවල ප්‍රතිඵලයක් වශයෙන් 1969 වර්ෂයේදී මෙම ආයතනය ලංකාවේ පිහිටුවීමට තීරණය විය.

ලෝක ආහාර සංවිධානය/ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩපිළිවෙල සහ ලංකාණ්ඩුව අතර අත්සන් කළ ගිවිසුම අනුව මුල් පස් වර්ෂය තුළ ලෝක ආහාර සංවිධානය/ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩපිළිවෙල විසින් ආයතනය පවත්වා ගෙන යාමට ආධාර කරනු ඇත. පස් වර්ෂය අවසාන යෙහි මෙය සම්පූර්ණ වගකීමෙන් යුතු ජාතික ආයතනයක් බවට පෙරලෙනු ඇත. විශේෂඥ නිළධාරීන්ගේ වේතන, විදේශීය පුහුණුවීමේ හා උපකරණවල වියදම් සඳහා ලෝක ආහාර සංවිධානය/ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩ පිළිවෙල විසින් රුපියල් ලක්ෂ පනස් පහක පමණ ආධාර මුදලක් වෙන් කරනු ඇත. ලංකාණ්ඩුව විසින් ආයතනයේ ඉඩම සහ ගොඩනැගිලිද, දේශීය නිළධාරීන්ගේ සේවාවද, වෙනත් පහසුකම් ද සපයනු ඇත. මෙම ආයතනය ඉදිරි කාලය තුළ එය පිහිටුවා ඇති රටෙහි පමණක් නොව, මුළු ආසියාතික රටවල අවශ්‍යතාවයන් සපුරාලනු ඇතැයි අපේක්ෂා කෙරේ.

සුදුසු ස්ථානයක් නොමැතිවීම , නිළධාරීන්ගේ වෙනස්වීම ආදී කරුණු කීපයක් නිසා ආරම්භක අවදියේදී ආයතනය ප්‍රමාණවත් වේගයෙන් ගමන් කිරීමට අපොහොසත් විය. එම අපහසුතාකම් දැන් මඟහැරී තිබේ. වර්ෂ දෙකක " ළදරු විය" ඉක්මවා ඇති ආයතනය, රටෙහි ආර්ථිකයට ඉතා වැදගත් වන කෘෂිකර්ම අංශයට උසස් සේවාවක් ඉටු කිරීමට සූදානමින් සිටී.

ලංකාවේ ගොවිජන ව්‍යුහය, වැවිළි අංශය හා ගොවි අංශය වශයෙන් බෙදිය හැකිය. විශාල ඉඩම්, අධික ධන ආයෝජන, කම්කරු සංවිධානය හා වැඩි නිෂ්පාදන වැවිළි අංශයේ කැපී පෙනෙන ලක්ෂණ වෙත්. වෙනත් අංශවල ආයෝජනය සඳහා විදේශීය විනිමය වැඩි කොටසක් ලැබෙන්නේ වැවිලි අංශයෙන්ය. ලෝක වෙළඳ පොළේ බඩු මිළ පහත බැසීම නිසා මෑතක සිට වැවිලි අංශයටද නව ප්‍රශ්නවලට මුහුණ දීමට සිදුවී ඇත. මෑතකදී උද්ගත වූ මෙම තත්වය නිසා තිසරු තේ හා රබර් ඉඩම්වල වෙනත් භෝග වැවීමේ අවශ්‍යතාවය මෙන්ම, අඩුවෙන් මුදල් යොදවන සුළු ඉඩම් අංශයේ නිෂ්පාදිතය වැඩි කිරීමේ අවශ්‍යතාවයද තදින්ම දැනී ඇත.

ආහාර භෝග වැවීමේ නිරතව සිටින සුළු ඉඩම් අංශය කෘෂිකාර්මික ආර්ථිකයේ කේන්ද්‍රස්ථානය ලෙස මට හැඟී යයි. රැකී රක්ෂා පුළුල් ලෙස උත්පාදනය කළ යුත්තේ ද මෙම අංශය මගින්ය. වැඩි ආදායම් අපේක්ෂා කරන, වැඩියෙන් රැකීරක්ෂාවලට අවස්ථා සපයන ගොවිතැන් ක්‍රමයක් බිහි කිරීමේ කාර්යභාරය සුළු ඉඩම් අංශය වෙත පැවරේ. මේ ක්‍රමයෙන් ඉදිරි වර්ෂ 5 හෝ 6 තුළදී ආනයන ද්‍රව්‍ය සැළකිය යුතු අයුරින් කපා හරිනු ඇතැයි අපේක්ෂා කෙරේ.

කෘෂිකර්ම අංශයෙහි සුළු ගොවීන්ගේ සංවර්ධනයට බාධක වශයෙන් ඇත්තේ ශිල්පීය කරුණුවලට වඩා ආයතනික හා ව්‍යුහය සම්බන්ධ කරුණු බව පිළිගෙන ඇත. නවීන කර්මාන්ත හා පර්යේෂණ වලින් නිෂ්පාදනය වැඩි දියුණු කිරීමේ ශිල්පීය ක්‍රම සොයාගෙන ඇතත්, ඒවා පුළුල් ලෙස ගොවීන් අතර ව්‍යාප්ත වී නොමැත. එබැවින් විටින් විට රජය මගින් ආයතනික ප්‍රතිසංශෝධන ක්‍රියාත්මක කර ඇත. ඉන් සමහරක් සාර්ථක ප්‍රතිඵල ලබාදී ඇත. කෙසේ වෙතත්, ආයතනික ප්‍රතිසංශෝධන ස්ථිර පදනමක් නොමැතිව සීමිත දැනුම මත කරන තාවකාලික පිළියම් විය. මේ නිසා මෙම ආයතනික කරුණු ගැඹුරු ලෙස හැදෑරීමත්, සෑම තරාතිරකම අයවළුන් වෙත ඒ සම්බන්ධ පුහුණුවක් ලබාදීමත් අත්‍යවශ්‍යය.

ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයට වැදගත් වැඩ කොටසක් ඉටු කිරීමට සිදු වන්නේ මෙතැන්හිදීය. කෘෂිකර්ම අංශයට සම්බන්ධ වූ අත්‍යවශ්‍ය සාමාජීය හා ආයතනික කටයුතු පිළිබඳ විස්තර එක්රැස් කොට ප්‍රතිපත්ති සාධනයට උපකාරීවෙන අයුරින් හා තත්වාකාරයෙන් එම කරුණු ඉදිරිපත් කිරීම ආයතනයට භාර කටයුත්තකි. භෝග වැවීම, සතුන් ඇති කිරීම පිළිබඳ ශිල්පීය ක්‍රම වලට, වඩා ඉතා පුළුල් කාර්යක් ඉටු කිරීමට ආයතනයට පැවරී ඇත. මුළු ගොවි ජීවන ක්‍රමය රඳා පවත්නා වූ ආහාර භෝග, ගව භෝග, හා ගොවියා සහ වෙළඳ පොළත්, සමාජයත්, අතර අන්‍යොන්‍ය සම්බන්ධය ගැඹුරින් වටහා ගැනීම ආයතනයේ අරමුණ වේ.

ගොවිජන අංශයෙහි සංවර්ධනය ඇන හිටීමට හේතු වූ ව්‍යුහය සම්බන්ධ වූ මූලික කරුණක් නම් ඉඩම් භුක්ති ක්‍රමයයි. ප්‍රථමයෙන් කුඩා කාණ්ඩවලට බෙදී යන්නා වූ සුළු ඉඩම් පිළිබඳ ප්‍රශ්නය සඳහන් කළ හැක. කැබලිවීමේ ප්‍රතිඵලයක් වශයෙන් ඉඩම් අයිතිය හා අඳ අයිතිය පිළිබඳ තරඟ වැඩිවන අතර එම ඉඩම් වලින් යැපෙන්නා වූ ගොවි ජනයාට ආයෝජන ශක්තිය හීනවීමත් ආදායම් මාර්ග හිනවීමත්, රක්ෂා විරහිතවීමත් ආදී ප්‍රශ්න කීපයකට මුහුණ පෑමට සිදුවේ. දෙවනුව කැබලිවලට කැඩුනා වූ කුඩා ඉඩම් නිසා, විශේෂයෙන් පස හා වතු පාලනයට සම්බන්ධ වූ විවිධ ප්‍රශ්න උද්ගත වේ.

1958 වර්ෂයේ කුඹුරු පනතින් අඳ ගොවීන්ට අඳ අයිතිය තහවුරු කොට, ඉඩම් භුක්තිය පිළිබඳ ප්‍රශ්නය නිරාවරණය කිරීමට ප්‍රයත්නයක් දරන ලදී. එහෙත් ක්‍රියාත්මක කිරීමේදී ඉෂ්ඨ ප්‍රතිඵල ලැබුනේ නැත. වර්තමානයේ පවත්නා ඉඩම් අයිතිය මූලික වශයෙන් වෙනස් වීමට ඉඩ තිබේ. මෙහිලා ගොවි කටයුතු පුහුණු කිරීමේ ආයතනයට වැදගත් කාර්යක් පැවරේ. ඉඩම් නිරවුල් කිරීම, කෘෂිකාර්මික ණය සහ අලෙවිය, සහතික මිළ, සහ පොදු වශයෙන් කෘෂිකර්මයෙහි සමාජ - ආර්ථික රටාව වර්තමාන සංවර්ධන අවශ්‍යතාවයන්ට අනුකූලව ප්‍රබල වෙනස්වීම් වලට භාජනය විය යුතුයි. මහවැලි සහ උඩවලවේ වැනි යෝජනා ක්‍රමවල ඇතිවීගෙන යන විශාල සංවර්ධන ක්‍රම නිසා මෙම අංශවලට පර්යේෂණ හා පුහුණු කිරීමේ වැඩ කටයුතු තවත් වැදගත් වෙයි.

ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය විසින් පර්යේෂණ කටයුතු මෙහෙයවීමේදී රටෙහි ප්‍රශ්න තත්වානුකූලව වටහාගෙන, ක්‍රියාත්මක විසඳුම් කෙරෙහි යොමු කෙරෙන කරුණු ඉස්මතු කළ යුතු වෙයි. ආකල්පයෙන්ද, ක්‍රියාවෙන්ද, ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය ක්‍රියාශීලී ආයතනයක් වන බව නොඅනුමානය. සංවර්ධන වැඩ පිළිවෙළට සම්බන්ධ වූ සැම කෙනෙක්ම ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයේ ප්‍රගතිය ගැන විමසිලිමත්ව හා බලාපොරොත්තු සහිතව බලා සිටින බව මට විශ්වාසයි. මෙම ආයතනයේ කටයුතු සාර්ථක වේවායි ප්‍රාර්ථනා කරමි.

## කොබ්බෑකඩුව. හෙක්ටර් රාජකරුණා සෙනෙවිරත් බණ්ඩාර (1916 - 1983)

**උපත** : 1916 අගෝස්තු 29 වන දින, දෙල්දෙණිය, යටිනුවර. **පියා**: වෛද්‍ය ටිකිරි බණ්ඩා කොබ්බෑකඩුව. **මව** : සංඝමිත්තා දුල්ලෑවේ කුමාරිහාමි. **අධ්‍යාපනය** : ත්‍රිත්ව විද්‍යාලය - මහනුවර, විශ්ව විද්‍යාලය - කොළඹ , නීති විද්‍යාලය - මහනුවර. **රැකියාව** : නීතිඥ මහනුවර. **නාගරික මන්ත්‍රී** : 1956 , මහනුවර නගර සභාව, අම්පිටිය ආසනය. **සාමාජික** : කුඹුරු පනත ක්‍රියාත්මක කිරීමේ මණ්ඩලය 1957 -1960 , **තරඟකිරීම** : යටිනුවර පාර්ලිමේන්තු ආසනය 1960 මාර්තු, **සභාපති**: රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව 1963 - 1965, **පාර්ලිමේන්තු මන්ත්‍රී** : 1970 - 1977 , යටිනුවර ආසනය, ශ්‍රී.ලං.නි.ප. **කෘෂිකර්ම හා ඉඩම් ඇමැති** 1970 - 1977, ජනාධිපතිධූරාපේක්ෂක : 1982 ශ්‍රී.ලං.නි.ප. **විපත**: 1983 සැප්තැම්බර් මස 18 වන දින.

# හෙක්ටර් කොබ්බෑකඩුව
# ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයේ
# ව්‍යුහය

ශ්‍රී ලංකා ජනරජය හා ආහාර හා කෘෂිකර්ම සංවිධානය / එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩ සටහන අතර ඒකාබද්ධ ව්‍යාපෘතියක් ලෙස පාර්ලිමේන්තු පනතක් මගින් ගොවි කටයුතු පර්යේෂණ පුහුණු කිරීමේ ආයතනය 1972 වර්ෂයේ ස්ථාපිත කරනුලැබීය. ලක් රජය හා ආහාර හා කෘෂිකර්ම සංවිධානය/ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩ සටහන අතර පැවැති ගිවිසුම 1977 දී අවසන් වීමෙන් පසුව කෘෂිකර්ම ඉඩම් හා වන සම්පත් අමාත්‍යාංශයට අනුබද්ධිත සංස්ථාවක් ලෙස ආයතනය ක්‍රියාත්මක විය. මෙම ආයතනය අද දින සිට හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය යනුවෙන් හැඳින්වේ.

කෘෂිකර්ම අමාත්‍යාංශයේ ලේකම් වරයා සභාපතිත්වය දරණ පාලක මණ්ඩලයක් මගින් ආයතනයෙහි කළමනාකාරිත්වය සිදු කරනු ලබන අතර ශ්‍රී ලංකාවේ ගොවිජන ක්ෂෙත්‍රයේ සංවර්ධන කටයුතුවල නියැලී සිටින වෙනත් රේඛීය ආයතනවල නියෝජිතයන් ගෙන් පාලක මණ්ඩලය සමන්විත වේ.

ගොවි කටයුතු ක්ෂෙත්‍රයෙහි පර්යේෂණ පැවැත්වීම, වර්ධනය කිරීම සහ සම්බන්ධීකරණය ආයතනයෙහි ප්‍රධාන අරමුණ වේ. ආයතනයේ එම පුළුල් අරමුණු අනුව, පර්යේෂණ පැවැත්වීමත්, ගොවි කටයුතු සංවර්ධන ක්ෂෙත්‍රයෙහි පර්යේෂණ කටයුතුවල නියැලී සිටින විශ්ව විද්‍යාල සහ පර්යේෂණ ආයතනයන්හි පර්යේෂණ කටයුතු සම්බන්ධීකරණය කිරීමත්, මෙරට ගොවි ජනතාවගේ සමාජ ආර්ථික සංවර්ධනය කෙරෙහි බලපාන ප්‍රශ්ණ හඳුනා ගැනීම සඳහා පර්යේෂණ පැවැත්වීමත්, අදාල රේඛීය ආයතනවල නිළධාරීන් සහ පොදු ගොවි ජනතාව වෙනුවෙන් ගොවි කටයුතු සංවර්ධනය පිළිබඳ පුහුණු පාඨමාලා පැවැත්වීමත්, ආයතනයෙන් අපේක්ෂා කෙරේ. අග්නිදිග ආසියානු රටවල් අතර ගොවි කටයුතු සංවර්ධනය පිළිබඳ තොරතුරු සම්බන්ධතා පැවැත්වීමේත් ඒවා විසුරුවා හැරීමේත් මධ්‍යස්ථානයක් ලෙස ආයතනය කටයුතු කරයි. පර්යේෂණ අංශ 4 කින් හා ආධාරක අංශ තුනකින් ආයතනය සමන්විත වේ.

**පර්යේෂණ අංශ නම් :**

1. කෘෂි සම්පත් කළමනාකරණය අංශය
2. කෘෂි සැලසුම් හා ඇගැයීම් අංශය
3. වාරි ජල කළමනාකරණ සහ ගොවිජන සම්බන්ධතා අංශය
4. අලෙවි සහ ආහාර ප්‍රතිපත්ති අංශය

**ආධාරක අංශ නම් :**

1. පුහුණු අංශය
2. සංඛ්‍යාන සහ දත්ත සැකසුම් අංශය
3. පරිපාලන අංශය

සියළු අංශවල කටයුතු මෙහෙයවීම හා සම්බන්ධීකරණය අංශ ප්‍රධානියා විසින් ඉටු කරනු ලැබේ. පරිපාලන අංශ හැරුණු විට අනෙක් අංශවල කාර්ය භාරය ඉටුකිරීමට පර්යේෂණ සහ

ආධාරක කාර්ය මංඩලයෙහි ආධාරය ලැබේ. ආයතනයේ අධ්‍යක්ෂවරයා එහි ප්‍රධාන විධායක නිළධාරියා වෙයි. දළ වශයෙන් ග්‍රන්ථ 13,000 කින්ද වාර සඟරා 65 කින්ද මුද්‍රණය නොකරන ලද වාර්තා 800 කින්ද සමන්විත අංග සම්පූර්ණ පුස්තකාලයක් ආයතනය සතුව පවතී. ගොවි කටයුතු සංවර්ධනය පිළිබඳ ජාතික තොරතුරු මධ්‍යස්ථානය, කෘෂිකර්ම තොරතුරු ජාලය සහ සමාජ විද්‍යා තොරතුරු ජාලය ආදියට ආයතන පුස්තකාලය ක්‍රියාශීලීව සහභාගී වෙයි.

පර්යේෂණ වාර්තා, වාර ප්‍රකාශන, ආයතන පුවත් සඟරාව, ගොවි කටයුතු අධ්‍යනය පිළිබඳ ශ්‍රී ලංකා සඟරාව, ගොවි ජනතා සහ කමතලම් (දෙමළ) මාසික සඟරා, නිතිපතා නිකුත් කරන ආහාර ද්‍රව්‍ය විවරණිකාව සහ ආහාර ද්‍රව්‍ය වෙළඳ පොළ පිළිබඳ මාසික විමර්ශණය වැනි විවිධ ආකාරයේ ප්‍රකාශන රාශියක් ආයතනයෙන් නිකුත් වේ.

ආයතනයේ පර්යේෂණ වැඩ සටහන් සමඟ සම්බන්ධ වීමට කැමැති බාහිර පර්යේෂකයන් ,ශිෂ්‍ය පර්යේෂකයන් සහ වෙනත් වෘත්තිකයන් ආයතනයේ වැඩ කටයුතුවලට සම්බන්ධ කරනු ලැබේ. කෙටි කාලයක් නැවති සිටීමට කැමති පර්යේෂකයන්ට හා වෙනත් අයට ආයතනය මගින් නේවාසික පහසුකම් සැපයේ.

බංගලිදේශයේ පිහිටි ආසියා හා පැසිපික් කලාපීය ඒකාබද්ධ ග්‍රාමීයය සංවර්ධන මධ්‍යස්ථානය සමඟ සම්බන්ධිත දේශීය ආයතනය වන්නේද මෙම ආයතනයයි. එම මධ්‍යස්ථානයේ පාලක මණ්ඩලයෙහි සභාපති ධූරයටත්, විධායක කමිටුවෙහි උප සභාපති ධූරයටත්, ශ්‍රී ලංකාව 1992 දී පත්විය.

වායු සමනය කළ ශ්‍රවණාගාරයකින්, සම්මන්ත්‍රණ ශාලාවකින්, දේශණ ශාලාවකින් සහ කමිටුශාලා තුනකින් ආයතනය සමන්විත වේ. දේශීය හා විදේශීය වෙනත් සංවිධානවලට සම්මන්ත්‍රණ ශාලා සහ නැවතීමේ පහසුකම් ලබාගත හැකිය. කෙසේ වුවද මෙම පහසුකම් ලබාදීමේ ප්‍රමුඛත්වය ගොවි කටයුතු ක්ෂේත්‍රයට හිමි වේ.

*- ඩී.එම්. ආරියරත්න*
*ලේකම්, කෘෂිකර්ම, ඉඩම් හා වන සම්පත් අමාත්‍යාංශය.*
*1995 පෙබරවාරි 22.*

# හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ සහ පුහුණු කිරීමේ ආයතනයේ කාර්යභාරය

එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩපිළිවෙල සහ ආහාර සහ කෘෂිකර්ම සංවිධානයෙහි සහාය ඇතිව 1972 දී ස්ථාපිත ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය දැන් කෘෂිකර්ම, ඉඩම් සහ වන සම්පත් අමාත්‍යාංශය යටතේ ක්‍රියාත්මක වෙයි. කෘෂිකර්ම සංවර්ධනයට අදාල වූ ආයතනික සාධකයන්ට සම්බන්ධ ගොවි කටයුතු පර්යේෂණයෙහි යෙදීම සහ පෝෂණය කිරීමත්, ඒ සියළුම පර්යේෂණ සම්බන්ධීකරණය කිරීමත්, 1972 අංක 5 දරණ පනත යටතේ ඇති නීතිමය විධානයන්ගෙන් ආයතනයට පැවරී ඇත. මෙම ආයතනය අද සිට හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය යනුවෙන් නාමගත වන අතර ඒ අනුව පනත සංශෝධනය කරනු ඇත.

රජයේ දෙපාර්තමේන්තු, පලාත්පාලන ආයතන සහ මහජන සංස්ථා සහ සෙසු ආයතන මඟින් කෙරෙන ගොවිකටයුතු පර්යේෂණ සම්බන්ධීකරණය කිරීමත්, එමඟින් එම ක්ෂේත්‍රයේ විද්වත් පර්යේෂකයින්ට මෙන්ම මහජනයාටත් පහසුවෙන් පරිශීලනය කළ හැකි දත්ත බැංකුවක් පිහිටුවීමත්, ආයතනයට පැවරෙන තවත් වගකීමකි.

කෘෂි නිෂ්පාදන, ග්‍රාමීය ණය, වෙළඳපළ, ව්‍යාප්ති සේවය, ඉඩම් භුක්තිය සහ ඉඩම් නිරවුල් කිරීම ආදී ප්‍රායෝගික ප්‍රශ්න රාශියකට මැදිවී සිටින ගොවියා නිරතව සිටින ගොවිතැනට කෙලින්ම බලපාන සූක්ෂම ආර්ථික මට්ටමේ සංවර්ධන ක්‍රියාදාමය රඳාපවතින්නේ සාර්ව ආර්ථික මට්ටමේ ක්‍රියාකරී විනය, ස්වභාවික සහ මානව සම්පත් සංවර්ධනය යන ත්‍රිවිධ කාරකයින් මතයි. ඒ හේතුව නිසාම ගොවි කටයුතු සංවර්ධනයට සහ එහි නවීකරණයට කේන්ද්‍රීය වශයෙන් බලපාන ප්‍රශ්න හා සම්බන්ධිත විසඳුම් සොයාගැනීම සඳහා කෘෂිකර්මය සහ ග්‍රාමීය සංවර්ධනය, ආර්ථිකශීලී ඉඩම් භාවිතය ආදී විෂයයන් ගැන කරුණු සොයාබලන පර්යේෂණ පැවැත්වීම ආයතනයට නීතිමය වශයෙන් පැවරෙන විශාල වගකීමකි. කෘෂිකර්ම සංවර්ධනය පෝෂණය සහ දිළිඳුකම දුරුකිරීමේ අරමුණ වන රජයේ නිරතුරු ව්‍යායාමය අරභයා සේවය කිරීම සහ උපදෙස් දීම ආයතනයට පැවරෙන්නේ මෙවැනි වාතාවරණයක් යටතේයි. සංවර්ධනය සඳහා වූ සංශිලිෂ්ඨ ඒකාබද්ධ සැලැස්මක් සඳහා ගමේ ගොවියාත්, සංවර්ධනයට සම්බන්ධ සෑම මට්ටමකම නිළධාරීනුත් එක්තැන්ව එක්සිත්ව මේ කාර්යය ඉටුකළ යුතු බවට ගරු කෘෂිකර්ම, ඉඩම් සහ වන සම්පත් අමාත්‍යතුමා අදාල සියළුදෙනාටම උපදෙස් දී ඇත. එසේ සකස් වන්නා වූ සංවර්ධන ව්‍යාපෘතීන්හි නිරවද්‍ය මෙන්ම ක්ෂණික ක්‍රියාකාරීත්වය සහතික කිරීම සඳහා ඒවා ඇගැයීමේ කාර්යයද ආයතනයට පැවරෙනවා ඇත.

කාර්යක්ෂම වෙළඳපළක් මඟින් ගොවිපළෙහි ආදායම වර්ධනය කිරීම සඳහා දිරිදීමනා සැලසුම් කිරීම ගැන අතීතයෙහිදී පර්යේෂණ කිහිපයක් පවත්වා ඇත. ඒ පර්යේෂණයන්ගෙන් හෙළි වූ එක් ප්‍රධාන කරුණක් නම් වෙළඳපළ පිළිබඳ නිරවද්‍ය තොරතුරු නොලැබීම කෘෂි වෙළඳපොළ වර්ධනයට ප්‍රධාන බාධාවක් බවයි. එබැවින් මේ සම්බන්ධයෙන් ආයතනය විසින් ආහාර සහ කෘෂිකර්ම සංවිධානය සහ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩපිළිවෙලට ව්‍යාපෘතියක් ඉදිරිපත් කරන ලදුව ඔවුන් විසින් ඊට අවශ්‍ය මුදල් ප්‍රතිපාදන සැලසීමටත්, ශිල්පීය සහාය ලබාදීමටත්, එකඟ වී ඇත. 1994 වර්ෂයේ දී මේ ව්‍යාපෘතිය ආරම්භ කළ අතර එය පූර්ණ වශයෙන් ක්‍රියාත්මක වූ විට ගොවීන්ට වෙළෙන්දන්ට සහ පාරිභෝගිකයන්ට නිෂ්පාදන ද්‍රව්‍ය පිළිබඳ නියම මිළ සහ වෙළඳ තත්ත්වය දැන ගැනීමට ඉඩ සැලසෙන බැවින් වෙළඳපොළ විවෘත භාවය සහ තරඟකාරීත්වය වර්ධනය වනවා ඇත. මීට අමතරව අස්වනු නිෂ්පාදනය, ආහාර සැපයීම/ ඉල්ලුම, ගබඩා තත්ත්වය සහ ආනයනය ගැන වඩාත් නිශ්චිත සහ කාලීන තොරතුරු ව්‍යාපෘතිය මඟින් ලබාගැනීමෙන් වැඩි

දියුණු වූ ආහාර සුරක්ෂිතභාවයක් ස්ථාපිත කිරීමට බලාපොරොත්තු වනු ලැබේ.

මේ අයුරින් මේ දක්වා ආයතනය බෙහෙවින් ගරු හෙක්ටර් කොබ්බෑකඩුව මහතාගේ දූරදර්ශී චින්තනයෙන් පරිපෝෂිත වූ අතර ඔහු රෝමයේදී පැවැත්වුණු ආහාර සහ කෘෂිකර්ම සංවිධානයේ දහසය වැනි රැස්වීමේ සඳහන් කළ පහත දැක්වෙන ප්‍රකාශයෙන් අප ආයතනයේ අර්ථාන්විතත්වය ප්‍රකට වෙයි.

" ගොවිපළ පාලනය සහ නිෂ්පාදනය, ගොවිකටයුතු ආයතන, ණය පහසුකම් සහ මිළ නියම කිරීමේ න්‍යායයන් සහ වෙනත් බොහෝ හේතූන් පිළිබඳව ප්‍රයෝගසිද්ධ දත්තයන් එකතු කිරීමත්, විග්‍රහකිරීමත් යන දෙකරුණ පාදක කරගත් ලාභශීලී බහු රැකියා නියුක්ති කෘෂිකර්ම රටාවක් සැලසුම් කළ යුතුව ඇත. ඇත්ත වශයෙන්ම ලංකාව සහ සංවර්ධනය වන සෙසු රටවල්වල දක්නට නැත්තේත් මේ සංවර්ධන රටාවයි. මෙවැනි අවස්ථාවන්හිදී අපි උභතෝකෝටික ප්‍රශ්නයකට මැදිවෙමු. එනම් අප විසින් දත්ත නොමැතිව එම කාර්ය්‍ය කරන අතරම දත්ත සපයා ගතයුතුවද ඇත. කෘෂිකර්ම ක්ෂෙත්‍රය පරිපූර්ණ වශයෙන් වෙනස් කිරීමට ක්ෂණිකව අවශ්‍ය දත්තයන් ආහාර සහ කෘෂිකර්ම සංවිධානය සහ එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩපිළිවෙළෙහි සහාය ඇතිව ස්ථාපිත ගොවිකටයුතු පර්යේෂණ සහ පුහුණුකිරීමේ ආයතනයෙන් ලබාගැනීමට ඉදිරි අනාගතයේදී අපි බලාපොරොත්තු වෙමු."

ගොවි කටයුතු පර්යේෂණ සහ පුහුණු කිරීමේ ආයතනය, හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය වශයෙන් නම් කිරීම ප්‍රතිපත්ති සංස්කරණය, නායකත්වය, සංගතිය සහ රාජ්‍ය කාර්යභාරය ආදීන් ගැන එතුමා තුළ වූ දර්ශනයට නිශ්චිත ගරු කිරීමක් වනු ඇත.

*- **ආචාර්ය ඇස්. ජේ. සමරසිංහ***
*අධ්‍යක්ෂ, හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු*
*පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය*
***1995 පෙබරවාරි 22.***

# හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනයේ පාලක මණ්ඩලය

| | | |
|---|---|---|
| ඩී. එම්. ආරියරත්න මහතා | - | පාලක මණ්ඩලයේ සභාපති සහ කෘෂිකර්ම ඉඩම් හා වන සම්පත් අමාත්‍යාංශයේ ලේකම් |
| ආචාර්ය ඇස්. ජී. සමරසිංහ | - | අධ්‍යක්ෂ, හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය |
| ටී. කිමෝටෝ මහතා | - | ආහාර හා කෘෂිකර්ම සංවිධානයේ නියෝජිත |
| බී. බුළුමුල්ල මහතා | - | නියෝජිත, කෘෂිකර්ම ඉඩම් හා වන සම්පත් අමාත්‍යාංශය |
| ටී.පී.ජී.එන්. ලීලාරත්න මහතා | - | නියෝජිත, වෙළඳ වාණිජ හා ආහාර අමාත්‍යාංශය |
| එෆ්. බී. ආර්. ද සිල්වා මහතා | - | නියෝජිත, අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය |
| ආචාර්ය ඩී. එස්. විජේසිංහ | - | නියෝජිත, ශ්‍රී ලංකා මහ බැංකුව |
| මහාචාර්ය එච්. පී එම්. ගුණසේන | - | නියෝජිත, කෘෂිකර්ම පීඨය, පේරාදෙණි විශ්වවිද්‍යාලය |
| ආචාර්ය ජිනසිරි ප්‍රනාන්දු මහතා | - | කෘෂිකර්ම අධ්‍යක්ෂ |
| පී. සී. කේ. විජේරත්න මිය | - | ගොවිජන සේවා කොමසාරිස් |
| පී. ටී. ප්‍රතිරාජ මහතා | - | ඉඩම් කොමසාරිස් |
| ඩබ්. එන්. එම්. බොතේජු මහතා | - | වාරිමාර්ග අධ්‍යක්ෂ |
| එස්. බී. දිවාරත්න මහතා | - | සමූපකාර සංවර්ධන කොමසාරිස් |
| ආර්. ද සිල්වා මිය | - | ලේකම්, පාලක මණ්ඩලය |

**க.ஆ.ப. நிறுவகத்தை ஹெக்டர் கொப்பேகடுவ**
**கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமாக**
**பெயர் மாற்றுதலும்,**
**நிறுவகத்தின் 23ஆவது ஆண்டு**
**நிறைவு விழாவும்**

மு.ப. **9.30 –** அழைக்கப்பட்டோர் தமது ஆசனங்களில் அமர்தல்.

**9.45 –** கூட்டத் தொடர் ஆரம்பித்தல்.

**9.55 –** பெயர்ப் பலகையைக் கமத்தொழில், காணிகள், வனவள அமைச்சர் திரைநீக்கம் செய்தல்.

**10.05 –** திரு. ஹெக்டர் கொப்பேகடுவவின் நினைவாக
இரு நிமிடநேர மௌனாஞ்சலி.

**10.07 –** வரவேற்புரை
**கலாநிதி எஸ்.ஜி.சமரசிங்க,**
பணிப்பாளர்
ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்.

**10.15 –** உரை
**திரு.டி. எம்.ஆரியரத்ன,**
செயலாளர்,
கமத்தொழில் காணிகள், வனவள அமைச்சு.

**10.30 –** உரை
**கௌரவ சமரவீர வீரவன்னி,**
கமத்தொழில் பிரதி அமைச்சர்

**10.45 –** உரை
**கௌரவ நந்தமித்ர ஏக்கநாயக்கா,**
காணிகள், வனவள பிரதி அமைச்சர்.

**11.00 –** தமிழில் உரை.

**11.15 –** உரை
**திரு.ரி.கிமோடோ,**
இலங்கையில் உ.வி.தா. பிரதிநிதி

**11.30 –** உரை
**கௌரவ டி.எம்.ஜயரத்ன**
கமத்தொழில், காணிகள், வனவள அமைச்சர்.

**பி.ப. 12.15 –** 20 வருட சேவையைப் பூர்த்தி செய்த க.ஆ.ப.நி.
உத்தியோகத்தர்களைக் கௌரவித்தல்

**12.30 –** தேசிய கீதம்

## கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தை
## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமாக பெயர் மாற்றுதல்

1970–1977 இன் ஐக்கிய இடது முன்னணி அரசாங்கத்தில் கமத்தொழில், காணிகள் அமைச்சராக விளங்கிய கௌரவ திரு.எச்.எஸ்.ஆர்.பீ.கொப்பேகடுவ அவர்களை இலங்கையின் சரித்திரபூர்வ காணி சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தி, அமுல்படுத்தியதிற்கு மட்டுமன்றி, ஆனால், கண்டிய கமக் குடும்பங்களின் நிலைமைகளை உயர்த்துவதற்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவராக இந்நாட்டின் முன்னேற்றகரமான எண்ணங்களைக் கொண்ட மக்கள், குறிப்பாக மலைநாட்டு கமக் குடும்பத்தினர் நினைவு கூருகிறார்கள். உள்ளூர், மற்றும் வெளிநாட்டு பெருந்தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களிடமிருந்து கண்டிய கமக் குடும்பங்களுக்கு ஆரம்பத்தில் சொந்தமாக கண்டிப் பகுதியில் இருந்த பரந்த விஸ்தீரணம் கொண்ட காணிகளை விடுவிப்பதற்கான இயக்கத்தை நடத்துவதற்கு இவர் முன்னணிப் பங்கினை வகித்ததுடன், கண்டிய மக்களின் நலன்களுக்காக இவற்றை மீள் அர்ப்பணித்தார். இக்காணிகளின் உற்பத்தித் திறனை உச்சப்படுத்துவதுடன், இவ்வித காணிகளின் அபிவிருத்தியின் பொருளாதார நன்மைகளை இப்பகுதி மக்களுக்கு வழங்கும் நோக்கங்களுக்காக இவர் மலைநாட்டு கூட்டுறவு தோட்ட அபிவிருத்திச் சபையையும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையையும் தாபித்தார்.

2. இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் அப்புக்காத்தாக திரு.கொப்பேகடுவ விளங்கினார். கண்டியில் அப்புக்காத்துப் பணியை மேற்கொண்டிருக்கையில், கண்டிய கமக் குடும்பங்களின் உரிமைகளையிட்டு போரிடுவதற்கான இயக்கங்களில் இவர் பங்கெடுத்ததுடன், இவ்விதமான வழக்குகளில் கட்டணமின்றியும் ஆஜராகியுள்ளார். தேசிய அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்பதாக, கண்டியில் உள்ளூராட்சி அரசியலில் தீவிர பங்கினை இவர் வகித்ததுடன், கண்டி மாநகரசபையின் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் வந்த வருடங்களில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் இவர் சேவையாற்றினார்.

3. கமத்தொழில்துறையைப் பொறுத்தளவில் கமத்தொழில் துறையில் நிறுவகங்களுக்கிடையில் சீர்திருத்தங்களையும், கட்டமைப்பு மாற்றங்களையும் அறிமுகப்படுத்துவதற்கான அவசியத்தையும், அரசாங்கத்தின் பலதரப்பட்ட கமத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான புதிய சட்டங்களை இயற்றுவதற்கான அவசியத்தையும் இவர் உணர்ந்தார். ஆறு வருட குறுகிய காலத்தில் இக்காரணத்திற்காக இவர் ஒரு தொகை சட்டவாக்க நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினார். பின்வரும் சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருந்தார்:

(அ) 1972 இன் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் சட்டம்.
(ஆ) 1972 இன் 2 ஆம் இலக்க கமத்தொழில் உற்பத்தித்திறன் சட்டம்.
(இ) 1972 இன் 5 ஆம் இலக்க கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவக அதிகாரச் சட்டம்.
(ஈ) 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம்.
(உ) 1972 இன் 14 ஆம் இலக்க நெற்சந்தைப்படுத்தும் சபை அதிகாரச் சட்டம்.
(ஊ) 1973 இன் 9 ஆம் இலக்க நெல் உற்பத்தியாளர் சேமிப்புச் சட்டம்.
(எ) 1973 இன் 13 ஆம் இலக்க தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சட்டம்.
(ஏ) 1973 இன் 30ஆம் இலக்க இலங்கை பழச் சபை அதிகாரச் சட்டம்.
(ஐ) 1973 இன் 42ஆம் இலக்க கமத்தொழில் காணிகள் சட்டம்.
(ஒ) 1976 இன் 25ஆம் இலக்க ஜனாவாஸ சட்டம்

கமத்தொழிலில் திரு.கொப்பேகடுவவின் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கும், இலங்கையின் கமத்தொழில் அபிவிருத்தியில் அவரின் தொலை நோக்கிற்கும் இந்த சட்டவாக்கங்கள் சான்று பகர்கின்றன.

4. இலங்கையில் கமநல ஆராய்ச்சிக்கான அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் திரு.கொப்பேகடுவ இனங்கண்டார். இலங்கையில் கமநல நிலைமைகள் தொடர்பான விடயங்கள் மீதான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக கமநல ஆராய்ச்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கான இயக்கத்தில் இவர் முன்னணிப் பங்கினை வகித்தார். உணவு விவசாயத் தாபனத்தின் அனுசரணையுடன் இவர் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறவகத்தை (க.ஆ.ப.நி.) தாபித்தார். இந்நிறுவகம் தென் ஆசியாவில் கமநல ஆராய்ச்சிக்கான பிராந்திய நிலையமாகப் பணியாற்றும். கொழும்பு – 7, 114 விஜயராம மாவத்தையில் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்திற்கான

வசதிகளைத் தாபிப்பதற்கு இவர் தனிப்பட்ட ஆர்வத்தைச் செலுத்தினார். க.ஆ.ப. நிறுவகம் 1972 இன் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் ஒன்றிணைக்கப்பட்டது. திரு.கொப்பேகடுவவின் அர்ப்பணிப்பு, அயராத முயற்சி ஆகியவற்றின் நிமித்தமே க.ஆ.ப. நிறுவகத்தைத் தாபிப்பது சாத்தியமாகியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இலங்கையில் கமநல ஆராய்ச்சிக்கான பிரதான நிறுவகமாக இந்நிறுவகம் ஒரு மதிப்பை ஈட்டியுள்ளதுடன், இலங்கையில் கமநல ஆராய்ச்சிக்கான முன்னணி ஆராய்ச்சி நிறுவகமாக பிராந்திய, சர்வதேச ஆராய்ச்சி தாபனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

5. இலங்கையில் கமநல அபிவிருத்திக்காக திரு.கொப்பேகடுவவினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாராட்டத்தக்க அளவு பணி மேற்கொள்ளப்பட்ட போதும், பொதுவாக கமத்தொழிலுக்கும், குறிப்பாக கண்டி கமக் குடும்பங்களுக்கும் அவர் நல்கிய சேவைகளுக்கு அவருக்கு உரித்தான அங்கீகாரத்தை வழங்க நாடு தவறியுள்ளது என்பதே எமது கருத்தாகும்.

6. எனவே, நாட்டிற்கான திரு.கொப்பேகடுவவின் சேவைகளையும், கமத்தொழில் துறைக்கான அவரது பங்களிப்பையும், கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தை ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமாக பெயர் மாற்றுவதன் மூலம் இலங்கை அரசாங்கம் கௌரவிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

1971 பெப்ரவரி 22 இல் திரு.கொப்பேகடுவவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட க.ஆ.ப.நிறுவகத்தின் 23 ஆவது வருடாந்த நிறைவுடன், பெயர் மாற்றும் வைபவமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கமத்தொழிலுக்கு தனது அர்ப்பணிப்பையும், சேவைகளையும் அளித்த திரு.ஹெக்டர் கொப்பேகடுவவை கௌரவிக்குமுகமாக க.ஆ.ப.நி. இடப்பரப்பில் சிலை ஒன்றை நிறுவவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**கௌரவ டி.எம். ஐயரத்ன**
கமத்தொழில், காணிகள், வனவள அமைச்சர்.

## நிறுவகத்தின் அங்குரார்ப்பணத்தில் கௌரவ ஹெக்டர் கொப்பேகடுவவின் உரை

> கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் கூட்டிணைப்பு, அங்குரார்ப்பணம் ஆகியவற்றை குறிக்குமுகமாக 1972 பெப்ரவரி 21 இல் நடைபெற்ற கமநல அமைப்பும், அபிவிருத்தியும் மீதான முதலாவது நெறியின் போது விவசாய, காணி அமைச்சர் கௌரவ ஹெக்டர் கொப்பேகடுவ அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் கூட்டிணைப்பில் பங்குபற்றுவதற்கு இங்கு இன்று இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் இந்நிறுவகம் இன்று தனது முதலாவது பயிற்சி நெறியை அங்குரார்ப்பணம் செய்வதும் ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வுப் பொருத்தமானதாகும்.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் சேவையாற்றுவதற்காக கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என 10 வருடங்களுக்கு முன் ஓர் ஆலோசனை தெரிவிக்கப்பட்டதில் இருந்து முதல் தடவையாக கமநல ஆராய்ச்சி பயிற்சிக்கான தாபனம் ஒன்றுக்கான ஆலோசனை தோன்றியது. இவ்விதமான நிறுவகத்திற்காக கருத்திற்கு எடுக்கப்பட்ட நோக்கங்களாக பின்வருவன விளங்கின:

(அ) இப்பிராந்தியத்தின் நாடுகளுடனான ஒத்துழைப்புடன் கமநல கட்டமைப்பின் பிரச்சினைகள் மீது ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.

(ஆ) கமநல சீர்திருத்தம், மற்றும் அது தொடர்பான துறைகள் மீது பயிற்சி வசதிகளை அளித்தல்.

(இ) கமநல பிரச்சினைகள் மீதான தகவலின் பிராந்திய களஞ்சியத்தை வழங்குதல்.

உத்தேச நிறுவகத்தின் அமைவிடத்தைக் கோரி உணவு விவசாய தாபனத்திடம் விண்ணப்பித்த பல நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கை அரசாங்கத்திற்கும், உ.வி.தா/ஐ.நா.அ. திட்டத்திற்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றங்களின் விளைவாக இந்நிறுவகம் இலங்கையில் அமைய வேண்டும் என 1969 இல் உடன்பாடு செய்யப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும், உ.வி.தா/ஐ.நா.அ. திட்டத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் முதல் ஐந்து வருட காலத்தின் போது நிறுவகத்திற்கு உ.வி.தா/ஐ.நா.அ. திட்டத்தினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். அத்துடன் ஐந்து வருடங்களின் இறுதியில் இந் நிறுவகம் முழுமையான தேசிய பொறுப்பாக விளங்கும். நிபுணர்களின் சம்பளங்கள், கடல்கடந்த நாடுகளில் பயிற்சி மற்றும் உபகரணங்களின் செலவு என்ற வழியில் உ.வி.தா/ஐ.நா.அ. திட்ட உதவி சுமார் 5.5 மில்லியன் ரூபாவாகும். இலங்கை அரசாங்கமானது தனது பங்களிப்பாக நிறுவனத்திற்காக உள்ளூர் ஆளணியினர் உட்பட காணி, கட்டிடங்கள், மற்றும் ஏனைய வசதிகளை அளிக்கும். காலப் போக்கில் இந் நிறுவகமானது அதன் அமைவிடத்தின் நாட்டிற்கு மட்டுமன்றி ஆசிய பிராந்தியத்திற்கும் தனது சேவையை அளிக்கும்.

பொருத்தமான உள்ளூர் அமைவிடம், ஆளணியினர்களில் மாற்றங்கள் போன்ற ஒரு தொகை காரணங்களின் நிமித்தம் நிறுவகமானது மெதுவாகவே பணிகளை ஆரம்பித்தது. ஆனால், இவை யாவும் எம் பின்னால் தள்ளப்பட்டுள்ளதுடன், இந்த இரு வருட ஆரம்ப நிலையில் எமது பொருளாதாரத்திற்கு முக்கியமானதாக விளங்கும் ஒரு தருணத்தில் கமநலத் துறையின் அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பை மேற்கொள்வதற்கு நிறுவகத்திற்கான ஒரு தளத்தை இப்போது வலிமைப்படுத்தியுள்ளது.

பரந்த அடிப்படையில் கூறுவதென்றால் இலங்கையின் கமநல கட்டமைப்பானது பெருந்தோட்டத் துறையையும், கமநலத் துறையையும் கொண்டுள்ளது. பொதுவாக பெருந்தோட்டத் துறையானது பாரிய உடமைகள், தீவிர மூலதனப் பிரயோகம், ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர், பெரிதும் உயர்ந்த உற்பத்தித்திறன் ஆகியவற்றினால் குறிப்பிடப்படுகின்றது. ஏனைய துறைகளில் முதலிடுவதற்கான வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கான பாரிய பொறுப்பை இத்துறை கொண்டுள்ளது. உலக சந்தைகளில் வீழ்ச்சியடையும் விலைகளின் தொடர்ச்சியாக

அண்மைய வருடங்களில் பெருந்தோட்டத் துறையானது இரு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது. பொருளாதாரமற்ற தேயிலை, இறப்பர் காணிகளின் கிரமமான பரம்பலாக்கலுக்கான அவசியத்திற்கும், குறைந்த மூலதன தீவிர சிறு உடமையாளர்கள் துறையில் உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கான அவசியத்திற்கும் இச்சூழ்நிலையானது கொண்டு சென்றுள்ளது.

உணவுப் பயிர்களின் செய்கைக்குப் பெரிதும் அர்ப்பணிக்கப்பட்ட சிறு உடமையாளர் துறையே எமது கமநல பொருளாதாரத்தின் முக்கிய துறையாக எனக்குத் தோன்றுகின்றது. தொழிலுக்கான பெருமளவு சந்தர்ப்பங்களை வழங்கும் ஒரு துறையாக இது விளங்குகின்றது. எமது விவசாயத்தின் சிறு உடமையாளர் துறையானது வருமான முனைப்பான பண்ணையாக்கத்தின் தொழில் வாய்ப்பான தீவிரமான முறை ஒன்றை வழங்க வேண்டும் என தற்போது கோரப்படுகின்றது. இதன் மூலமே அடுத்த ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குள் இறக்குமதிகளைக் கணிசமான அளவு நீக்க முடியும்.

விவசாயத்தின் சிறு உடமையாளர் துறையில் அபிவிருத்திக்கான தடைக்காரணிகள் தொழில் நுட்பத்தை விட அதிகளவு நிறுவன கட்டமைப்பு ரீதியாகவே விளங்குகின்றன எனப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியின் திருந்திய தொழில் நுட்பங்களின் அறிவை நவீன ஆராய்ச்சியும், தொழில்நுட்பமும் பெற்றுள்ள போதிலும், இவை பாரிய அளவில் கமக்காரர்களினால் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் நிறுவக ரீதியான மாற்றங்களை அறிமுகப்படுத்தின. இவற்றில் சில நன்மை பயக்கும் விளைவுகளைக் கொண்டிருந்தன. இருந்த போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட தகவல் மற்றும் முரண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பெரிதும் திருந்திய அளவிலான நிறுவக ரீதியான மாற்றங்கள் விளங்கின. இக்காரணங்களுக்காக சகல மட்டங்களிலும் போதியளவு பயிற்சியுடன், இந்த நிறுவக ரீதியான காரணிகளின் போதியளவு ஆய்வானது நாட்டின் ஆரம்பத் தேவைப்பாடாக உள்ளது.

இங்கு தான் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமானது அடிப்படைப் பங்களிப்பை மேற்கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. கமத்தொழில்துறை தொடர்பான சமூக, பொருளாதார நிறுவக ரீதியான விடயங்கள் மீதான அத்தியாவசிய தரவை இது சேகரிப்பதுடன், கொள்கை வகுக்கும் காரணங்களுக்கான உறுதியான அமைப்பில் இத் தரவைச் சமர்ப்பிக்க வேண்டும். பயிர் ஒன்றின் வளர்ச்சி, அல்லது கால்நடை ஒன்றைப் பரிபாலித்தல் ஆகிய தொழில்நுட்ப அம்சங்களில் இந்நிறுவகம் கரிசனை கொண்டிருக்கவில்லை. இது பயிர்கள், கால்நடை, கமக்காரர், சந்தை, கமத்தொழில் முறை, தொழிற்படும் சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புகளைத் தாபிப்பதில் கரிசனை கொண்டுள்ளது.

கமத்துறையில் அபிவிருத்தியை தடுக்கும் பிரதான கட்டமைப்புப் பிரச்சினைகளில் ஒன்றாக காணி ஆட்சி விளங்குகின்றது. முதலாவதாக அதிகரித்து வரும் உப பிரிவு, சிறு கூறு ஆகியவற்றினால் சிறு உடமைகளில் பிரச்சினை உள்ளது. இக்காணியில் தங்கியுள்ள பெருந்தொகை மக்களுக்கு காணி, குத்தகை உரிமை, முதலீட்டு ஆற்றளளவின் போதாமை, குறைந்த வருமானம், போதிய தொழிலின்மை ஆகியவற்றுக்கான அதிகரித்த போட்டியை இது கொண்டு வருகின்றது. இரண்டாவதாக உடமைகளின் சிறிய அளவும், சிறு கூறுகளும் விசேடமாக மண், நீர்முகாமைத்துவத்திற்கான ஒழுங்கமைப்பு, நிருவகிப்பு ஆகியவற்றில் பிரச்சினைகளை எழுப்புகின்றன.

1958 இன் நெற்காணிகள் சட்டமானது குத்தகைக் கமக்காரர்களுக்கு பாதுகாப்புகளை வழங்குவதன் மூலம் குத்தகை உரிமையின் மீதான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிவகுக்கின்றது. ஆனால், அமுலாக்கத்தின் விளைவுகள் திருப்தியை அளிக்கவில்லை. நடைமுறையில் உள்ள காணி உரிமை, உரித்துரிமை ஒழுங்குகள் மீது அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். இதில் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்திற்கு குறிப்பிடத்தக்க பங்குள்ளது. காணிக் குடியேற்றம், விவசாயக் கடன், கமத்தொழில் சந்தைப்படுத்தல், விலை ஊக்கிகளின் திட்டம், கமச் செய்கையின் சமூக, பொருளாதாரம் ஆகியன, இந்நாடானது தனது அபிவிருத்தியையிட்டு முகம் கொடுக்கும் சவால்களுடன் முரண்பாடற்ற புதிய இலக்கினைக் கொண்டிருக்க வேண்டும். மகாவலி, உடவளவை போன்ற திட்டங்களில் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்திகளின் நிமித்தம் ஆராய்ச்சி, பயிற்சியின் இத்துறைகள் அதிக அவசரமானவையாகியுள்ளன.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமானது தனது சகல ஆய்வுகளிலும் பிரச்சினை முனைப்பாக விளங்குவதுடன், செயல்முறையான விளைவுகளுக்கு கொண்டு செல்லும் வகையில் தகவலை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகமானது வெளித் தோற்றத்திலும், செயல்திறனிலும் ஒரு

செயலூக்க நிறுவகமாக விளங்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அபிவிருத்தியின் மீது கடப்பாட்டினைக் கொண்டுள்ள ஒவ்வொருவரும் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் முன்னேற்றத்திலும், அபிவிருத்தியிலும் அளப்பரிய ஆர்வத்தையும், எதிர்பார்ப்பினையும் கொண்டிருப்பார்கள் என்பதையிட்டு நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். நான் இந்நிறுவகத்திற்கு சகல சிறப்புகளும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

**கொப்பேகடுவ, ஹெக்டர் ராஜகருணா செனவிரத் பண்டார (1916–1983)**

**பிறப்பு:1916** ஆகஸ்ட் 29ஆந் திகதி, தெல்தெனிய, யட்டிநுவர; **தந்தை:**வைத்திய கலாநிதி டிகிரிபண்டா கொப்பேகடுவ;**தாய்** :சங்கமித்த டுலுவே குமாரிஹாமி; **கல்விகற்ற இடங்கள்:** திரித்துவக் கல்லூரி, கண்டி, பல்கலைக்கழக கல்லூரி, கொழும்பு சட்டக் கல்லூரி, கொழும்பு; வழக்குரைஞர், கண்டிநீதிமன்றம்; **உறுப்பினர்:** அம்பிட்டிய வட்டாரம், கண்டி மாநகரசபை சுயேச்சை 1954; ஸ்ரீ.ல.சு.க. 1958; யட்டிநுவர பாராளுமன்றத் தொகுதியில் போட்டி ; 1960 மார்ச்சில் வெற்றியீட்டவில்லை; **உறுப்பினர்:**பகிரங்க சேவை ஆணைக்குழு, 1960;**தலைவர்:** பகிரங்க சேவை ஆணைக்குழு (1963–1965)**பாராளுமன்ற உறுப்பினர்:**யட்டிநுவர ஸ்ரீ.ல.சு.க. , 1970; கமத்தொழில், காணிகள் அமைச்சர் (1970–1977). ஜனாதிபதி அபேட்சகர், ஸ்ரீ.ல.சு.க., 1982 காணி சீர்திருத்த சட்ட மூலத்தின் முன்னோடி; பெருந்தோட்டங்களை தேசியமயப்படுத்தியவர்; **இறப்பு:**18 செப்டெம்பர் 1983.

# ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் கட்டமைப்பு

